கோவை தெற்கு தொகுதிக்குட்பட்ட 52–வது வட்டக் கிளைக் கழகத்திலுள்ள அங்கன்வாடிக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளது. அந்தக் கட்டடத்தைச் சீர்படுத்திக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி எண் 110–ன்கீழ் பழுதடைந்த அங்கன்வாடி மையங்களைச் சீரமைப்பதற்கு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தலா 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அங்கன்வாடி மையங்களையும் சீரமைப்பதற்கு உத்தரவிட்டுள்ளார்கள். பணி விரைவாக எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

கால்நடைக் கிளை நிலையம்

***71242—திரு. கோ. லோகநாதன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வைத்திணான்குப்பம் தொகுதி, குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், கூடநகரம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதலமைச்சராக பல்வேறு அரிய திட்டங்களைச் செயல்படுத்தி, இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையிலே பல்வேறு சாதனைகளைப் புரிவதற்கு*

2021 பிப்ரவரி 4]

உறுதுணையாக இருந்து, இன்றையதினம் இந்தியாவிலே மட்டும் அல்ல; உலகத்திலேயே மிகவும் பிரம்மாண்டமான கால்நடைப் பூங்காவை சேலத்திலே உருவாக்கி, அதை இன்னும் சில நாட்களிலே திறந்து வைக்கவிருக்கின்ற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வாழ்த்துக்களையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையிலே பல்வேறு திட்டப் பணிகளை செயல்படுத்தினாலும்கூட, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே, தமிழகத்தில் மூன்று கால்நடை மருத்துவக் கல்லூரிகளை இந்த ஆண்டு அமைத்துக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், கூடநகரம் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கோரியுள்ளார்கள். புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கூடநகரம் ஊராட்சியில், 3,021 கால்நடை அலகுகள் இருப்பதால், கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, இதுகுறித்து அரசின் கொள்கை முடிவுக்கு உட்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.*

திரு. கோ. லோகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வங்கக் கடலோரம் வற்றாத புகழோடு, சந்தனப் பேழையில் உறங்கிக்கொண்டிருக்கின்ற நம் தாய், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, அம்மா அவர்களின் வழியில் தமிழகத்தைச் சிறப்பான முறையில் ஆட்சி செய்து வருகின்ற சேலத்து சிங்கம், கொங்கு நாட்டுத் தங்கம், குடிமராமத்து நாயகர், விவசாயிகளின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் ஐயா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் ஜல்லிக்கட்டு நாயகர், தென்பாண்டிச் சிங்கம், சிறந்த பண்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டம், கே.வி. குப்பம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கூடநகரம் ஊராட்சியிலிருந்து செட்டிக்குப்பம் கால்நடைக் கிளை நிலையத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், கூடநகரம் இரயில்வே கேட்டைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். இந்தக் கூடநகரம் இரயில்வே கேட் நிரந்தரமாக மூடப்பட்டு இன்றைக்கு ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆக, செட்டிக்குப்பம் கால்நடைக் கிளை நிலையத்திற்கு கால்நடைகளை அழைத்துச் செல்ல வேண்டுமென்றால், செட்டிக்குப்பம் கால்நடைக் கிளை நிலையம், மேலாலத்தூர், மேல்முட்டத்தூர், காக்காதோப்பு வழியாக சுமார் 6 கி.மீ. தூரம் சுற்றிக்கொண்டு செல்ல வேண்டும்.

அதேபோல் செட்டிக்குப்பம் ஊராட்சியைச் சுற்றியுள்ள கூடநகரம், பட்டு, மேலாலத்தூர், கொத்தகுப்பம், அனங்காநல்லூர், செங்கல்பாடி ஆகிய 6 ஊராட்சிகளில் வசிக்கும் மக்கள் நீண்ட காலமாக இங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். நானும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதத்தின் மூலமாகத் தெரிவித்து, அதனடிப்படையில் அந்தப் பகுதியில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க போதிய தூரமும், கால்நடை அலகுகளும் இருக்கின்றன என்று அவர் தெரிவித்திருக்கிறார். அதற்காக மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, இந்தக் கால்நடைக் கிளை நிலையம் இந்த ஆண்டே செயல்பட, விரைந்து பணிகளை முடித்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2021 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வைத்தினான்குப்பம் தொகுதியைப் பொறுத்தவரையில், சுமார் 46,100 மாட்டு இனங்கள், 43,200 ஆட்டு இனங்கள் மற்றும் 1,43,000 கோழி இனங்கள் உள்ளன. இவற்றிற்கு மருத்துவம் மற்றும் இனப் பெருக்கச் சேவைகள் வழங்கிட, கே.வி. குப்பத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையும், மேல்மயில், லத்தேரி, வடுக்கன்தாங்கல், கீழ்ஆலத்தூர் மற்றும் காலம்பட்டு ஆகிய 5 இடங்களில் கால்நடை மருந்தகங்களும் மற்றும் காங்குப்பத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கக்கூடிய அந்தப் பகுதியையும் பரிசீலனை செய்து, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. லோகநாதன் அவர்கள்.*

திரு. கோ. லோகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும், பரிசீலனை செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விழுந்துவிடும், நாளைக்கு சரிந்துவிடும்*

என்று சொல்கிறவர்கள் நாக்கே வெட்கப்படும் அளவிற்கு, நாணப்படுகிற அளவிற்கு இந்த ஐந்தாண்டுக் காலம் நல்லாட்சியை நடத்திச் சென்று, எதிரிகளிடமிருந்து ஒரு கோழி, தாய்ப் பறவை தன்னுடைய குஞ்சுகளைத் தன்னுடைய செட்டைகளின் மறைவிற்குள் வைத்து அடைகாப்பதுபோல பத்திரமாகப் பாதுகாத்து, கட்சியையும் ஆட்சியையும் வழி நடத்தி, இன்றைக்கு மட்டுமல்ல; என்றைக்கும் இனி அம்மாவின் அரசுதான் தமிழ்நாட்டில் இருக்கும் என்று சொல்கிறவண்ணம் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி நடத்தி, தனது சாதனைச் சக்கரத்தால், தமிழகத்தினுடைய ஆட்சித் தேரை முன்னேற்றப் பாதையில் முறையாக நடத்திச் செல்கிற, தலைமுறைகள் தவமிருந்து பெற்ற தன்னிகரற்ற முதல்வர் அவர்களுக்கும், கண்கள் இரண்டாக இருக்கலாம்; ஆனால் காட்சி ஒன்றுதான் என்று சொல்கிற வகையிலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் துணையாக நிற்கின்ற நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எங்களுடைய ராதாபுரம் தொகுதி மக்களின் தமிழ் வணக்கங்கள் உரித்தாகட்டும்.

எங்களுடைய ராதாபுரம் தொகுதியில் இருக்கிற வள்ளியூர் பிளாக்–சங்கநேரியிலும், ராதாபுரம் ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கூடங்குளத்திலும், கால்நடைக் கிளை நிலையங்கள் வேண்டும் என்ற கோரிக்கை வெகுநாட்களாக இருந்து வருகிறது. தமிழக அரசினுடைய பார்வைக்கு முன்பாக இந்தக் கோரிக்கையை நான் பலமுறை வைத்திருக்கின்றேன். இந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்கள் கால்நடைகளைப் பராமரித்து, அதன்மூலமாக விவசாயத்தைப் பெருக்கி வருகிறார்கள். எனவே, இந்தப் பேரவையின் மூலமாக மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு இந்தக் கோரிக்கையை வைத்து, சங்கநேரியிலும், கூடங்குளத்திலும் நம்முடைய அரசு கால்நடைக் கிளை நிலையத்தை அமைத்துத் தருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்றால், குறைந்தது 3,000 கால்நடை அலகுகள்*

2021 பிப்ரவரி 4]

இருக்க வேண்டும் என்பது விதி. அந்தவகையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சங்கநேரி, கூடங்குளம் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றார்கள். இதுகுறித்து, துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து, தேவைப்படுமாயின் அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கால்நடைக் கிளை நிலையங்களை அதிகளவில் தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவில் அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு, இந்த ஆண்டு ஒவ்வொரு பகுதியிலும் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதேபோல், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்கும் இந்த ஆண்டு புதிய கால்நடைக் கிளை நிலையம் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

ஆரம்ப சுகாதார நிலையம்

***52577—திரு. ப. கந்தசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியம், ஜெ. கிருஷ்ணாபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்*